**செய்தி வெளியீடு எண்.793** **நாள். 7.12.2007**

## தமிழ்ப் பேரகராதியைப் புதுப்பித்திட சென்னைப் பல்கலைக்கழகத்திற்கும், திராவிட மொழிகளின் ஒப்பாய்வு மற்றும் மொழிபெயர்ப்புப் பணிகளுக்காக குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்திற்கும், தலா 10 இலட்சம் ரூபாய் நிதியுதவி

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்

திராவிடப் பல்கலைக் கழகத்திற்குத் திராவிட மொழிகளின் ஒப்பாய்வுத் திட்டப் பணிகளுக்கும், தமிழ் மொழி இலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளிலும், பிற திராவிட மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்திடும் திட்டப் பணிகளுக்கும் 10 இலட்ச ரூபாய் வழங்கப்படும் என்றும்; சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப் பேரகராதியைக் (Tamil Lexicon) கூர்ந்தாய்வு செய்து புதுக்கியும் பெருக்கியும் வெளியிடும் பணிக்காக 10 இலட்ச ரூபாய் வழங்கப்படும் என்றும் 2007–08ஆம் ஆண்டிற்கான, தமிழ் வளர்ச்சி மானியக் கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றும் வகையில், ஆந்திர மாநிலம், குப்பம் என்ற ஊரில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் திராவிட மொழிகளுக்காக உருவாக்கப்பட்டுள்ள திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு தமிழக அரசின் பங்குத் தொகையாக 1996ஆம் ஆண்டில் 50 இலட்ச ரூபாயும், 2000ஆம் ஆண்டில் 25 இலட்ச ரூபாயும் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, தற்போது தமிழ் மொழி இலக்கியங்களைப் பிற திராவிட மொழிகளிலும், பிற திராவிட மொழி இலக்கியங்களைத் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்திடும் திட்டப் பணிகளுக்காக அதன் துணைவேந்தர் முனைவர் ஜி,இலட்சுமி நாராயணா அவர்களிடம் 10 இலட்ச ரூபாய்க்கான காசோலையையும், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தயாரிக்கப்பட்டு ஒரு இலட்சத்து 17 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சொற்களுக்குரிய விளக்கங்களுடன் 7 தொகுதிகளாக வெளியிடப்பட்ட சென்னைப் பல்கலைகக்கழகத் தமிழ்ப் பேரகராதியைக் (Tamil Lexicon) கூர்ந்தாய்வு செய்து புதுக்கியும் பெருக்கியும் வெளியிடும் பணிக்காக, அதன் துணை வேந்தர் முனைவர் எஸ்.இராமச்சந்திரன் அவர்களிடம் 10 இலட்ச ரூபாய்க்கான காசோலையையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் இன்று (7.12.2007) வழங்கினார்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் திரு.எல்.கே.திரிபாதி, தமிழ்வளர்ச்சித் துறை, அறநிலையம் மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு.ஜி.சந்தானம், தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன் ஆகியோர் உடனிருந்தனர்.

***

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9